**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV of BNSS)

**C.C.No. 33-2026**

| | | | |
|---|---|---|---|
| Deposition of LW1 | | Examined as : PW 1 | |
| Name | : தமிழ்வாணி | Defence | : |
| Father/Husband Name | : சுந்தரேசன் | Court | : |
| Village | : கொடவிளாகம் | Taluk | : |
| Calling | : | | |
| Age | : 35/2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act Bharathiya Shakshiya Adhiniyam the day 04.03.2026

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை:-**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து சூப்பர்வைசர் வேலை செய்து வருகிறேன். சுமார் 3 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நான் வீட்டில் இருந்த போது எங்கள் தெருவில் சிலர் கூட்டமாக தகராறு செய்துகொண்டிருந்தார்கள். அந்த தகராறை வேடிக்கை பார்க்க சென்ற போது அந்த கூட்டத்தில் இருந்த யாரோ என்னை தாக்கினார்கள். யார் தாக்கினார்கள் என்று தெரியவில்லை. அந்த கூட்டத்தில் எதிரி இருந்ததாலும் அவருக்கும் எங்களுக்கும் ஏற்கனவே முன்விரோதம் இருந்து வந்ததாலும் அவர் தான் என்னை தாக்கியிருக்க கூடும் என நினைத்து அவர் மீது மிகை படுத்தி புகார் மனு கொடுத்துவிட்டேன். நீதிமன்றத்தில் தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த **கையொப்பம் மட்டும் அசாஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு சாட்சி பிறழ் சாட்சியாக மாறியதால் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு பரிசீலனைக்கு பின்னர் அனுமதிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:-**

ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது கொழுந்தனார் ஆவார். அவர்களுடன் நான் சமாதானம் ஆகி சமாதான மனுவில் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். கடந்த 19.02.2023 ம் தேதி மதியம் 02.00 மணியளவில் எதிரியின் சகோதரியும் அவரது கணவரும் எங்கள் வீட்டிற்கு வந்து பேசிக்கொண்டிருந்த போது

ஆஜர் எதிரி அவர்களை கூப்பிட்டார் என்றும், ஏன் கூப்பிடுகிறீர்கள் என்று நான் கேட்டதற்கு எதிரி என்னை தகாத வார்த்தைகளால் திட்டி எனது வீட்டிற்கு வந்து எனது தலைமுடியை பிடித்து கீழே தள்ளி, எனது நைட்டியை பிடித்து இழுத்து காலால் உதைத்தும், கம்பால் எனது வலது கை மற்றும் கழுத்தில் அடித்து காயத்தை ஏற்படுத்தினார் என்றும், கொலை மிரட்டல் விடுத்தார் என்றும் புகார் வாக்குமூலத்திலும் போலிசார் விசாரணையிலும் கூறிவிட்டு தற்போது எதிரியுடன் நான் சமாதானம் ஆகிவிட்டபடியால் அவர்களை இந்த வழக்கிலிருந்து விடுவிக்க வேண்டும் என்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV of BNSS)

**C.C.No. 33-2026**

| | | | |
|---|---|---|---|
| Deposition of LW3 | | Examined as : PW 2 | |
| Name | : ஆரோக்கியதாஸ் | Defence | : |
| Father/Husband Name | : தாஸ் | Court | : |
| Village | : கொடவிளாகம் | Taluk | : |
| Calling | : | | |
| Age | : 60/2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act Bharathiya Shakshiya Adhiniyam the day 04.03.2026

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை:-**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு சாட்சி பிறழ் சாட்சியாக மாறியதால் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு பரிசீலனைக்கு பின்னர் அனுமதிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:-**

அசா1 எனது பக்கத்து வீட்டை சேர்ந்தவர் ஆவார். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவரும் எனது பக்கத்து வீட்டை சேர்ந்தவர் ஆவார். கடந்த 19.02.2023 ம் தேதி மதியம் 02.00 மணியளவில் எதிரியின் சகோதரியும் அவரது கணவரும் அசா1ன் வீட்டிற்கு வந்து பேசிக்கொண்டிருந்த போது ஆஜர் எதிரி அவர்களை கூப்பிட்டார் என்றும், ஏன் கூப்பிடுகிறீர்கள் என்று அசா1 கேட்டதற்கு எதிரி அசா1ஐ தகாத வார்த்தைகளால் திட்டி அசா1ன் வீட்டிற்கு வந்து அசா1ன் தலைமுடியை பிடித்து கீழே தள்ளி, அசா1ன் நைட்டியை பிடித்து இழுத்து காலால் உதைத்தும், கம்பால் அசா1ன் வலது கை மற்றும் கழுத்தில் அடித்து காயத்தை ஏற்படுத்தினார் என்றும், கொலை மிரட்டல் விடுத்தார் என்றும் போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரி எனது பக்கத்து வீட்டை சேர்ந்தவர் என்பதால் அவரை இந்த வழக்கிலிருந்து விடுவிக்க வேண்டும் என்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.